# இயல் ஒன்று

# ஆய்வு அறிமுகம்

1.0 முன்னுரை

1.1 ஆய்வுத் தலைப்பு

1.2 ஆய்வு எல்லை

1.3 ஆய்வு நோக்கம்

1.4 கருதுகோள்

1.5 ஆய்வு அணுகுமுறை

1.6 ஆய்வு ஆதாரங்கள்

1.6.1 முதன்மை ஆதாரங்கள்

1.6.2 துணைமை ஆதாரங்கள்

1.7 ஆய்வு மொழிநடை

1.8 ஆய்வேட்டின் அமைப்பு

1.9 மேல் ஆய்வுக்காக

## 1.0 முன்னுரை

கன்னியாகுமரி மாவட்டம் பழங்காலத்தில் ‘வேணாடு’ என்றும் ‘நாஞ்சில்நாடு’ என்றும் அழைக்கப்பட்டது. கோட்டார் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி ஆகும். குமரி மாவட்டத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் வேகமாகப் பரவியதால் மக்களின் வாழ்க்கை முறையிலும், பண்பாட்டுத் துறையிலும், சமய நம்பிக்கையிலும், பல்வேறு விதமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. புனித தோமா, புனித சவேரியார், புனித அந்தோணியார் போன்றோரின் சமயப்பணியும், சமூகப்பணியும் கோயில்கள் தோற்றமும் போற்றுதற்குரியது. கோயில்கள் குறித்த வழக்காற்றுச்செய்திகள், வழிபாட்டு முறைகள் ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன. கத்தோலிக்க மக்கள் நன்மைகள் பல கிடைக்க வேண்டும் என்பதற்காக புனிதர்கள் வழியாக வணங்கி வேண்டுதல் செய்கின்றனர். புனித தோமாவின் மறைபரப்புப் பணிச்செய்தியும், புனித சவேரியாரின் இறைப்பணிப் பற்றியும், புனிதஅந்தோணியார் பற்றியச்செய்திகளும், வழிபாட்டு முறைகளும் மக்களோடு நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளதை கள ஆய்வின் மூலம் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

## 1.1 ஆய்வுத்தலைப்பு:

ஆய்விற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைப்பு “கோட்டார் மறைமாவட்ட புனிதர்கள் வழிபாடும் வழக்காறுகளும” (தோமா, சவேரியார், அந்தோணியார்) என்பதாகும். இவ்வாய்வு புனிதர்கள் மக்களோடு ஒன்றிக் காணப்பட்டதையும், வழிபாட்டுக்குக் கொடுத்தச் சிறப்புகள் குறித்தும், வழக்காற்றுக் கதைகள் குறித்தும் கள ஆய்வின் மூலம் உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காகவே இத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## 1.2 ஆய்வு எல்லை

கோட்டார் மறைமாவட்டத்திலுள்ள புனிதர்களின் கோயில்களான புனித தோமா கோயில் ஒன்றும், புனித சவேரியார் கோயில் ஐந்தும், புனித அந்தோணியார் கோயில் இருபத்தொன்றும் ஆய்வு எல்லையாகக் கொள்ளப்பட்டன.

## 1.3 ஆய்வு நோக்கம்

கோட்டார் மறைமாவட்டத்தில் புனித தோமா, புனித சவேரியார், புனித அந்தோணியார் போன்ற புனிதர்களின் கோயில்கள் பல உள்ளன. எனவே அவற்றைப் பற்றிய வழிவழிச் செய்திகளும், அவற்றின் வழிபாட்டு முறைகளும் கத்தோலிக்கக் கிறிஸ்தவ வளர்ச்சிக்கு எவ்வகையில் உதவி புரிகின்றன என்றும், மக்கள் புனிதர்களை வழிபடுவதால் ஏற்படும் பயன்களைக்குறித்தும், புனிதர்களின் கோயில்களை அறிமுகம் செய்து விரிவாக விளக்குவதையும் இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 1.4 கருதுகோள்

கத்தோலிக்கக் கிறிஸ்தவ வளர்ச்சிக்குப் புனிதர்கள் வழிபாடு எவ்வகையில் உதவிபுரிந்துள்ளது என்பதை வெளிக்கொண்டுள்ளதை இவ்வாய்வு நல்வழிப்படுத்தியுள்ளது.

மக்கள் புனிதர்கள் வழிபாட்டுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தினால் பல புதுமைகள் பெற்றுக் கொண்டனர். அத்தகையப் புதுமைகளின் தனித்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கோட்டார் மறைமாவட்ட வரலாற்றுச்சிறப்பையும், வழக்காறு சார்ந்த மெய்ம்மைக் கருத்துக்களையும் வாய்மொழிச்செய்திகளின் மூலம்இவ்வாய்வு வெளிக்கொணர்ந்துள்ளது.

ஆகவே புனிதர்கள் வழிபாடு போற்றிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகின்றது.

## 1.5 ஆய்வின் அணுகுமுறைகள்

முன்னாள் நிகழ்ச்சிகளைக் கோவைப்பட அமைத்து அவற்றின் தன்மையையும், அவற்றை நிகழ்வித்தவரின் தன்மையையும் ஆராய்ந்து எழுதப்பெறுவது வரலாறு எனப்படும். வரலாற்றுக்கு இன்றியமையாத கூறுகளாக காலம், நிகழ்வு, இடம் என்பவை அமையும். வரலாறை தலைமை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு வரலாற்றியல் அணுகுமுறையில் அமைந்துள்ளது.

மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கிறான். மனிதனின் சமூக வயப்பட்ட பண்பொழுக்கத்தைக் கூறுவதுடன், உட்பொருளையும் வழக்காற்றுச்செய்திகளை சமூகத்தோடு கூறியுள்ளதால் இவ்வாய்வு சமூகவியல் அணுகுமுறையுடன் அமைகிறது.

விளக்கம் என்பது ஒரேமாதிரியாக இருப்பது இல்லை. விளக்குதல் என்பது விளக்கவியல் அணுகுமுறையின் அடிப்படைப் பண்பாகும். அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்கவியல் அணுகுமுறையுடன் இவ்வாய்வு அமைகிறது.

## 1.6 ஆய்வு ஆதாரங்கள்

ஆய்விற்குத் தேவையான ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6.1 முதன்மை ஆதாரங்கள்

இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களாக நேரடிக் கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அமைந்துள்ளன. கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் வழிபாட்டு முறைகளை உற்று நோக்கி கோயில் தொடர்பாகக் கள ஆய்வின் மூலம் மக்களிடையே பெறப்பட்ட தரவுகள் முதன்மை ஆதாரங்களாகும்.

### 1.6.2 துணைமை ஆதாரங்கள்

முதன்மை ஆதாரத்திற்கு வலுவூட்டும் செய்திகளைத் தருவது துணைமை ஆதாரங்களாகும். ஆய்வுத்தொடர்பான நூல்கள், ஆய்வேடுகள், இதழ்கள், கட்டுரைகள் ஆகியன துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

## 1.7 ஆய்வு நடை

இவ்வாய்வு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. பிறநூல்களிலிருந்து கையாளும் மேற்கோள்கள் நூலில் உள்ளவாறே கொடுக்கப்பட்டுள்ளன. தகவலாளிகள் தந்த தரவுகள் இலக்கியநடையில் இடம்பெற்றுள்ளன.

## 1.8 ஆய்வேட்டின் பகுப்பு

“கோட்டார் மறைமாவட்ட புனிதர்கள் வழிபாடும் வழக்காறுகளும்” (தோமா, சவேரியார், அந்தோணியார்) என்னும் ஆய்வு ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

1 - ஆய்வு அறிமுகம்

2 - கிறிஸ்தவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

3 - கோட்டார் மறை மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு

4 - புனிதர்களின் வாழ்வும் பணியும்

5 - வழிபாட்டு முறைகள்

6 - கோயில்களும் வழக்காறுகளும்

7 - ஆய்வு நிறைவுரை

என்பனவாகும்.

## 1.9 மேல் ஆய்வுக்காக

குழித்துறை மறைமாவட்ட புனிதர்கள் வழிபாடும் வழக்காறுகளும், தோமா, அந்தோணியார், சவேரியார் தவிர பிற புனிதர்களின் வழிபாடும் வழக்காறுகளும், குமரி மாவட்ட கோயில்கள் ஆய்வு போன்ற ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.